003

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (இயற்கை விஞ்ஞானம்) - 2022/2023

மட்டம் - 05

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNU6212– உள்ளடங்கல் கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 17.11.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி – I

1. உள்ளடங்கற் கல்வி எனும் எண்ணக்கருவை உங்கள் சொந்த வார்த்தைகளில் சுருக்கமாக விளக்குக.
2. உலக சுகாதார அமைப்பின் (WHO) படி ஊனமுற்றோர் அல்லது அங்கவீனமுற்றோர் (Handicap) எவ்வாறு வரைவிலக்கணப்பட்டுள்ளது என்பதை ஒரு (01) எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. மீத்திறனுள்ள மற்றும் திறமையான பிள்ளைகளின் ஐந்து (05) பண்புகளைக் குறிப்பிடுக.
4. உள்ளடங்கல் வகுப்பறையில் ஆசிரியராக, வாசிப்பதில் சிரமம் உள்ள மாணவர்களின் அறிகுறிகளை எவ்வாறு அடையாளம் காண்பீர்கள்? ஒரு (01) எடுத்துக்காட்டுடன் சுருக்கமாக விளக்குக.
5. ஆசிரியர்களுக்கு பார்வைக்கூர்மை மற்றும் பார்வைக் குறைபாடு வகைப்பாடு பற்றிய அறிவு ஏன் முக்கியமானது. சுருக்கமாக ஆராய்க.
6. உள்ளடங்கல் வகுப்பறையில் பணிபுரியும் ஆசிரியர்களாக ஐந்து (05) முக்கியப் பாத்திரங்களைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.
7. குறைபாடுகள் இல்லாத சாதாரண மாணவர்களுக்கான உள்ளடங்கற் கல்வியின் ஐந்து (05) நன்மைகளைக் கூறுக.
8. உள்ளடங்கல் வகுப்பறையில் பல்வகைமை என்பதன் பொருளை இரண்டு (02) எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** உள்ளடங்கல் வகுப்பறையில் ஆசிரியராக, செவித்திறன் குறைபாடு உள்ள மாணவர்களை எவ்வாறு அடையாளம் காண்பீர்கள்? இரண்டு (02) எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** செவிப்புல அமைப்பில் வெளிக்காது, நடுக்காது மற்றும் உள் காது ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரதான கேட்கும் இழப்பை விவரிக்குக. **(07 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறையில் ஒரு ஆசிரியராக, ஆழ்ந்த செவித்திறன் இழப்பையுடைய மாணவர்களுக்கு இடமளிக்க குறைந்தபட்சம் நான்கு (04) உத்திகளை விளக்குக. **(08 புள்ளிகள்)**

10.

i. நீங்கள் ஒரு பாடசாலையில் ஆசிரியராக இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள், அங்கு அதிபரும் ஏனைய ஊழியர்களும் உள்ளடங்கற் கல்வியில் எதிர்மறையான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளனர். எனக் கொள்வோம்.
உள்ளடங்கற் கல்வி பற்றிய அவர்களின் எதிர்மறையான அணுகுமுறையை நீங்கள் எவ்வாறு அடையாளம் கண்டீர்கள்? உங்கள் பதிலை நியாயப்படுத்துக. **(05 புள்ளிகள்)**

ii. அவர்களின் எதிர்மறை மனப்பாங்கை நேர்மறையாக மாற்றப், பொருத்தமான உதாரணங்களுடன் ஐந்து (05) பொருத்தமான அணுகுமுறைகள் அல்லது வழிகளை பரிந்துரைக்குக. **(07 புள்ளிகள்)**

iii. பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பின்மை இலங்கை கல்வி முறையில் உள்ளடங்கற் கல்வி நடைமுறைகளை மேம்படுத்துவதற்குத் தடையாக உள்ளது.
இக்கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? இல்லையா? உங்கள் பதிலை நியாயப்படுத்துங்கள். **(08 புள்ளிகள்)**

11. "உள்ளடங்கற் கல்வி மனித உரிமை"

i. கலைத்திட்டத் தழுவல் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

ii. உள்ளடங்கல் வகுப்பறைகளில் மாணவர்களின் பல்வகைப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப ஆசிரியர்கள் கலைத்திட்டத்தில் இடமளித்தல் மற்றும் மாற்றியமைத்தலை மேற்கொள்ள முடியும் என்பதை விவரிக்குக. **(07 புள்ளிகள்)**

iii. நீங்கள் இலங்கை அரச பாடசாலையில் உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக இருப்பதால், வகுப்பறையில் உள்ள பல்வகைமைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான கலைத்திட்டத் தழுவலை மேற்கொள்ளும் போது எதிர்கொள்ளும் சவால்களை விளக்குக. **(08 புள்ளிகள்)**

12.

i. உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களிடையே காணப்படும் **ஐந்து** (05) பல்வகைத் தேவைகளை ஆராய்க. **(05 புள்ளிகள்)**

ii. உள்ளடங்கல் வகுப்பறையின் ஓர் ஆசிரியராக, அனைவருக்கும் கல்வியை நடைமுறைப்படுத்தும் போது காணப்படக்கூடிய தடைகள் யாவை? பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் இந்த தடைகளைச் சுருக்கமாக ஆராய்க. **(07 புள்ளிகள்)**

iii. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியராக மேலே உள்ள தடைகளை வெற்றிகொள்வதற்கான தீர்வுகளைப் பரிந்துரைக்குக. (தயவுசெய்து குறைந்தது நான்கு (04) தீர்வுகளை வழங்குக.) **(08 புள்ளிகள்)**

13.

i. உங்கள் வார்த்தைகளில் "அவதானக் குறைபாடும் அதீத செயலூக்கமும்" (ADHD) என்ற எண்ணக்கருவை சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

ii. அவதானக் குறைபாடும் அதீத செயலூக்கமும் உள்ள மாணவர்கள் ஏன் தாழ்வான கல்வி அடைவினை காட்டுகிறார்கள் என்பதை மூன்று (03) காரணங்களுடன் ஆராய்க. **(07 புள்ளிகள்)**

iii. பௌதீக விஞ்ஞானத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக, அவதானக் குறைபாடும் அதீத செயலூக்கமும் உள்ள மாணவர்களின் நடத்தையை நிர்வகிக்க உள்ளடங்கல் வகுப்பறைகளில் எவ்வாறான கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்தலாம். நான்கு (04) கற்பித்தல் நுட்பங்களை விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*